# திருக்குறளும் திருநர் வாழ்வியல் அறிவியலும்

**திருமதி.பி.பத்மினி**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)**
**கோயம்புத்தூர்-641 029**
**padmasri896@gmail**.com

**ஆய்வுச்சுருக்கம்**

உலகப் பொதுமறை என்ற சிறப்பிற்குரிய திருக்குறள் தமிழ்மொழியின் மிகத் தொன்மையான அற இலக்கியங்களில் ஒன்றாகும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் தலையாய நூலாகத் திகழும் திருக்குறளில் சொல்லப்படாத கருத்துக்களே இல்லை எனும் அளவிற்கு மனித வாழ்வியலின் கருத்துப் பெட்டகமாக, இலக்கியக் களஞ்சியமாக இன்றளவும் போற்றப்பட்டு வருகிறது. அவ்வாறு பொதுத்தன்மைக்கும் மதச்சார்பற்ற தன்மைக்கும் பெயர் பெற்ற திருக்குறளில் திருநர் குறித்த செய்திகள் காணக்கிடைக்கின்றன. அவ்வகையில் கல்லாமை, ஆள்வினை உடைமை, அவையஞ்சாமை ஆகிய அதிகாரங்களில் திருநரைப் 'பேடி' என்ற சொல்லாடலில் குறிப்பிடப்பட்டுள்ள குறள்களின் அடிப்படையில் திருநரின் பிறப்பியல் மற்றும் வாழ்வியலை அறிவியல் விளக்கங்களுடன் இவ்வாய்வு ஆராயப்படுகின்றது.

**திறவுச்சொற்கள்**

திருக்குறள், அற இலக்கியம், நீதி இலக்கியம், திருநர், திருநம்பி, திருநங்கை, மாற்றுப்பாலினத்தவர், மூன்றாம்பாலினத்தவர், அரவாணிகள், அறிவியல், மருத்துவம்.

**முன்னுரை**

உலக உயிர்கள் அனைத்தும் இன்பமுற வாழவே இயற்கை இவ்வுலகினைப் படைத்துள்ளது. அத்தகைய உலகில் வாழ்வதற்கான உரிமை அனைத்துயிர்களுக்கும் இருக்கிறது. ஆனால், மனிதன் மட்டும் இயற்கை விதியினை மாற்றி சக மனிதனைப் பிறப்பின் அடிப்படையில் பாலின ரீதியாக ஒடுக்குவதும், புறந்தள்ளுவதும் மனித உரிமை மீறல்களாகும். சகமனிதர்களின் வாழ்வியலைப் புரிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை இலக்கியங்களும் வலியுறுத்துகின்றன. அவ்வாறு சங்க மருவிய காலகட்டத்தில் இயற்றப்பட்ட திருக்குறள் அன்றைய திருநர் சமூக மக்களின் வாழ்வியலையும், சமூக நிலைப்பாட்டையும் அறியத் துணை செய்கின்றது. 'பேடி' என்னும் சொல்லால் திருநர் இழிவாகப் பார்க்கப்பட்டாலும் அவர்களின் இருப்பினைக் குறள்கள் உறுதி செய்கின்றன. இவ்வகைப் பாலியல் மாறுபாடு கொண்டவர்கள் இன்றோ நேற்றோ உருவானவர்கள் அல்ல என்றும் அறியமுடிகின்றது. அத்தகைய திருநரின் பிறப்பிற்கும், செயல்பாட்டிற்கும் இன்றைய அறிவியல் விஞ்ஞானம் அதற்கு விளக்கமளிக்கிறது. மூன்றாம் தர குடிமக்களாகப் பார்க்கப்படும் மாற்றுப் பாலினத்தவரை திருநர் என்ற அடைமொழியுடன் ஆண், பெண்ணுடன் சேர்ந்தே பார்க்கிறது நவீன அறிவியல் உலகம்.

**திருநர்**

ஒரு பாலினத்தில் பிறந்து மற்றொரு பாலினமாகத் தங்களை உணர்பவர்களையும், அப்பாலின அடையாளத்துடன் தங்களை வெளிப்படுத்துபவர்களையும் 'திருநர்' என்று அழைக்கின்றனர். அவ்வாறு பிறப்பால் ஆணாகப் பிறந்து வளரிளம் பருவத்தில் தங்களைப் பெண்ணாக உணர்வோரைத் 'திருநங்கை' என்றும் பெண்ணாகப் பிறந்து நாளடைவில் தங்களை ஒரு ஆணாக இனம் காண்போரைத் 'திருநம்பி' என்றும் இவர்களே திருநர் என்ற ஒரு குடையின்கீழ் சுட்டப்படுகின்றனர். சமூகத்தில் மட்டுமின்றி இலக்கியங்களிலும் விளிம்புநிலை மக்களாகிய 'திருநர்' மக்களின் பிறப்பு இன்னும் அடிப்படைப் புரிதலற்ற தன்மையிலேயே பார்க்கப்படுகின்றது. இத்தகையோரை இச்சமூகம் எவ்வாறு காண்கிறது என்பதை,

> “குடும்பமெனும் நிறுவனமும், சமூகமும் தாம் உருவாக்கஞ் செய்யப்பட்ட காலந்தொட்டே ஆண், பெண் என்ற இருவகைப்பட்ட பால்நிலைகளை மட்டும் எதிரெதிர் நிறுத்தி அவ்விரு பாலினரை மட்டும் வரையறைகளுக்குட்பட்ட விதிகளின் அடிப்படையில் ஆய்ந்து, தேர்ச்சியுறின் தம்முடன் இணைத்துக் கொண்டன. ஆனால், இதனுள் தேர்ச்சியுறாத ஆண், பெண் என்ற வகைப் பாட்டினுள் பொருந்தி வராத பாலுணர்வு மட்டுமே மாறுபட்ட திருநரைச் சகமானுட உயிராகக் கூட ஏற்றுக் கொள்ளாத நிலை சமூக நடைமுறையில் காணக்கிடைக்கிறது.”
>
> (முனைவர் கி.அய்யப்பன், தமிழ்ச் செவ்வியல் நூல்களில் திருநர், ப.38)

என்ற கூற்றிலிருந்து திருநரின் மாற்றுப் பாலுணர்வையும், அதனை இச்சமுதாயம் ஏற்றுக் கொள்ளாத நிலையையும் முனைவர் கி.அய்யப்பன் புலப்படுத்திக் காட்டுகின்றார். மேலும், குடும்ப புறக்கணிப்புகளாலும் சமூகப் புறக்கணிப்புகளாலும் திருநர் சமூக மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க நேரிடுகிறது. இவ்வாறு திருநங்கையரையும் திருநம்பியரையும் இழிவாகக் காணும் போக்கு சமூகத்தில் இன்றளவும் நடைபெறுவதைக் காணமுடிகின்றது.

**திருக்குறளில் திருநர்**

நீதி நூல்களில் முதன்மையானது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளாகும். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று இயல்களையும், நூற்றி முப்பத்தி மூன்று அதிகாரங்களையும், அதிகாரத்திற்குப் பத்துக் குறள்கள் வீதம் ஆயிரத்து முன்னூற்று முப்பது குறள்களையும் உள்ளடக்கியது. இதில் அறுபத்தி இரண்டாவது அதிகாரமான ஆள்வினையுடைமை, எழுபத்தி மூன்றாவது அதிகாரமான அவையஞ்சாமை ஆகிய அதிகாரங்களில் 'பேடி' எனும் சொல்லால் திருவள்ளுவர் திருநரைச் சுட்டிக்காட்டுவதை,

**“தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாளாண்மை போலக் கெடும்”**

(திருவள்ளுவர், திருக்குறள், அதிகாரம்-62, குறள்-614)

என்ற குறள், விடா முயற்சி இல்லாதவன் காரியத்தைக் கண்டு மலைத்துவிடுவான் அதுபோல பேடியானவன் (திருநங்கையர்) எதிரியைக் கண்டு நடுங்குவான் என்று கூறுவதன் மூலம் அன்றைய சமூகத்தில் பேடிகள் என்பவர்கள் வீரமற்ற, பயனற்ற,

கோழை எனும் பொருளில் இழிவாகவே திருநங்கைகள் கருதப்பட்டனர் என்பதை அறியமுடிகின்றது மேலும், அன்றைய காலக்கட்டங்களில் பேடிகளைப் போர்க்களத்திற்குள் அனுமதிக்கப் படாதவர்களாகவும், போர் புரிவதற்குத் தகுதியற்றவர்களாகவும் அவர்களுடன் போர் செய்வதை இழிவாகவும் கருதினர் என்பது புலனாகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக மகாபாரதத்தில் பெண்ணிலிருந்து ஆணாக மாறிய சிகண்டியுடன் பீஷ்மர் போர் புரிவதை இழிவாகக் கருதி உயிர் நீத்ததைக் காணமுடிகின்றது. மேலும் வள்ளுவர்,

**“பகையகத்துப் பேடிகை ஒளவாள் அவையகத்து**
**அஞ்சு மவன்கற்ற நூல்”**
(திருவள்ளுவர், திருக்குறள், அதிகாரம்-73, குறள்-727)
என்ற குறட்பாவின் மூலம் கல்வியில் சிறந்து விளங்கும் ஒருவன் கற்றறிந்த சான்றோர் அவையில் எதிர்வாதம் புரிபவனோடு பேச அஞ்சினால் அவன் கற்ற கல்வியானது எத்தகைய வலிமை வாய்ந்த ஆயுதங்கள் இருந்தும் போர்க்களத்தில் பகைவனைக் கண்டு அஞ்சி நிற்கும் பேடியின் செயலுக்கு ஒத்தது என்று ஆண்மகனுக்குப் பெருமை வீரமே என்பதை உணர்த்துவதற்காக திருவள்ளுவர் திருநங்கையரின் பேடித் தன்மையினைச் சுட்டிக்காட்டுகின்றார். இவ்வாறு திருக்குறளில் 'பேடி' என்ற சொல் இவ்விரண்டு குறள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் சங்க காலத்தில் ஆண்மகனுக்குக் காதலும் வீரமும் இருகண்களாகப் போற்றப்பட்ட நிலையில் சங்க மருவிய காலத்தில் தோன்றிய அறநூலாகிய திருக்குறள் மன்னர்களுக்கும், மன்னர்களுக்குக் கீழ் வாழ்கின்ற மக்களுக்கும் வாழ்வியல் அறஞ்சார்ந்த அறங்களைக் கூறுவதற்காக தனிமனித வீரத்துடன் பேடியின் வீரம் ஒப்பிட்டுப் பேசப்பட்டுள்ளது. அவ்வாறு வீரம் கொண்ட ஒருவனால் மட்டுமே வீட்டையும், நாட்டையும் காக்க முடியும் என்பதை உலகிற்கு உணர்த்தவே உடலால் ஆணாகவும், உணர்வால் பெண்மை தாங்கிக் காணப்படும் பேடிகள்(திருநங்கையர்) வீரமற்றவர்கள் என்பதையே இவ்விரண்டு குறள்களும் எடுத்துக்காட்டுகின்றன. இயற்கையில் பெண் என்பவள் ஆற்றல் வாய்ந்தவள் என்பதை அவளது கருவைச் சுமக்கின்ற பண்பு வெளிக்காட்டுகின்றது.

மனித சமுதாயத்தில் ஆண் என்பவன் வீரமிக்கவனாகக் காட்சிப்படுத்தப்படுகிறான். அதனால்தான் ஆண்மைக்குரிய வீரத்துடன் திகழும் பெண்களை இச்சமூகம் பேடிகளை வெறுத்து ஒதுக்குவது போல் ஒதுக்காமல் ஆண் எனும் மேனிலையாக்கம் செய்கின்றது. இந்நிலையில் திருநங்கையர் உடலளவில் ஆண் தோற்றமளித்தாலும் உள்ளத்தளவில் பெண்தன்மை கொண்டு விளங்குவதால் அவர்களை வீரமற்றவர்களாக காட்சிப்படுத்துகிறார் வள்ளுவர். இதன்மூலம் ஆண், பெண் தன்மையற்ற பேடிகள்(திருநர்) சமூக நிலையில் பயனற்றவர்களாகக் காட்சிப்படுத்தப்படுகின்றனர் என்பதை அவதானிக்க முடிகின்றது. மேலும், திருக்குறளில் கல்லாமை அதிகாரத்தில் உள்ள இரண்டாவது குறளில் கல்வியறிவற்ற கீழ்மக்கள் என்று பெண்களைக்கூறும் அக்குறிப்பு திருநரைக் குறித்து நிற்பதை,
“கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று”
(திருவள்ளுவர், திருக்குறள், கல்லாமை, குறள்-402)

என்று சபையில் கல்லாதவர் பேச நினைப்பது என்பது இரண்டு முலைகளும் இல்லாதவள் பெண் தன்மையினை விரும்புவதைப் போன்றதாகும். இதுவே அக்குறள் உணர்த்தும் பொருளாகும். இந்தக் குறளில் கூறப்படுகின்ற இரண்டு முலை இல்லாதவள் என்பது பேடியைக் குறிப்பதா**க,**

> **"அக்காலத்தில் ஹார்மோன் சிகிச்சை, அறுவை சிகிச்சை மூலம் உடல் உறுப்புகளை சரி செய்து கொள்ளும் அறிவியல் அறிவு இல்லாமல் இருக்கலாம். சமூகத்தில் பிள்ளைப்பேறு பெறத் தகுதி இல்லாதவர்களை 'மலடி' என்று கூறுகிறோம். இவர்கள் சமூகத்தில் மதிக்கப் பெறவில்லை. பிள்ளைப்பேறு இல்லாதவர்களை மனிதர்களாகக் கூட மதிக்காத நிலை அன்றையச் சமூகத்தில் இருந்திருக்கிறது.**
> **(முனைவர் கி.அய்யப்பன், அரவாணிகள் அன்றும் இன்றும், ப.93)**

என்ற அய்யப்பன் கூற்றிலிருந்து அன்றைய திருநரின் வாழ்வியலை அறியமுடிகின்றது. இதன்மூலம் ஆணாக இருந்து பெண்ணாக மாறுகின்ற திருநங்கையருக்குப் பெண்ணின் உணர்வுகள் இருந்தாலும் பெண்களுக்குரிய மார்பகங்கள் (முலைகள்) இருக்காது. பெண்ணாகப் பிறந்து ஆணாக மாறும் திருநம்பியருக்கு ஆணின் உணர்வுகள் இருக்கும். ஆனால், ஆண்களுக்குரிய மார்புகள் இன்றி பெண்ணுக்குரிய மார்பகங்கள் (முலைகள்) இருக்கும். இவ்வாறு மாற்றுப் பாலினப் பண்புகளை உள்வாங்கிக் கொண்டவர்கள் பாலின மாற்று அறுவை சிகிச்சையின் மூலம் தங்களது பாலின அடையாளத்தை வெளிப்படுத்தும் உடல் உறுப்புக்களை மாற்றம் செய்து கொள்கின்றனர். இதனை மெய்ப்பிக்கும் விதமாக,

> **"பிரிட்டனைச் சேர்ந்த டிரேசிலாகொண்டினோ பெண்ணாகப் பிறந்து இவர் சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஆணாக மாறினார். மார்பகத்தை அறுவை சிகிச்சை மூலம் அகற்றினார். ஆண்களுக்கான ஹார்மோன்களையும் எடுத்துக் கொண்டார். அதனால் அவருக்குச் சிறிதளவு தாடி வளர்ந்தது. பெயரையும் தாமஸ் பீட்டி என மாற்றிக் கொண்டார். பெண் ஒருவரையும் திருமணம் செய்து கொண்டார். அதே சமயம் பிறக்கும்போது இருந்த பெண்ணுக்குரிய செக்ஸ் உறுப்புகள் மற்றும் கர்ப்பப்பை போன்றவை அப்படியே இருந்தன."**
> **(காலைக்கதிர்-6.7.2008, ப-10)**

என்று நாளிதழ் கூறும் செய்தியின்படி 'முலையிரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று' என்ற வள்ளுவரின் வரி திருநரைப் பற்றிப் பேசுவதாக அறியமுடிகின்றது.

**பேடி – அகராதி விளக்கம்**

'பேடி' என்னும் சொல்லிலும் இகர ஈறு இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. 'பேடி' எனும் சொல்லுக்கு அகர முதலி பெண்தன்மை மிகுந்த 'அலி '

என்று பொருள் கூறுகிறது. அலி என்னும் சொல்லை முதன்மைச் சொல்லாக ஏற்றுக்கொண்டு பெண்தன்மை மிகுந்திருப்பதை இது விளக்குகிறது.

**பெ.1(த.வ) ஆண்மை அற்றவன்; impotent men 2.வீரம் இல்லாதவன்; coward கோழை. போர் என்றால் புறமுதுகு காட்டி ஓடும் பேடிகள் அல்ல நாங்கள் (க்ரியாவின் தமிழ் அகராதி, ப.106) என்றும், பெண்மை மிகுந்த அலி; ஒரு விரல்; பயம், hermaphrodite with female charateristics, middle finger, fear (நர்மதாவின் தமிழ் அகராதி, ப.697) என்றும் அகராதிகள் விளக்கமளிக்கிறது. மேலும், ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிகுந்தவள், அலி; பேடிப் பெண் கொண்டு ஆடுகை கடுப்ப (அகநானூறு, 206: 2) (தொ.4.ப.1797), என்று வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கியப் பேரகராதி விளக்கம் கூறுகின்றது.**

தேவநேய அகரமுதலியில் திருநர் குறித்த பேடி, பேடியர் வகை, பேடு என்னும் சொற்களுக்கு விளக்கமளிப்பதாக முனைவர் மு. அருணாசலம்,

பேடி : பென் - பெண் - பேண் - பேடு – பேடன் – பேடி
ஆண்தன்மையை விரும்பும் பெண் பேடன் (திருநம்பி)
பெண்தன்மையை விரும்பும் ஆண் பேடி (திருநங்கை)

பேடியர் வகை : இயற்கைப் பேடியரும் செயற்கைப் பேடியரும் எனப் பேடியர் இரு வகையர். செயற்கை உவளகக் காவற்கும் பேடிமைக்கும் பேடியராக்கப்பட்டவர் ஆவர்.

பேடு : “ ஆண்மை திரிந்து பெண்மை கொண்டவன் பேடி. பெண்மை திரிந்து ஆண்மை கெட்டவன் பேடன். இவ்விருவருக்கும் பொதுப்பெயர் பேடு”
(முனைவர் மு.அருணாசலம், தமிழ் இலக்கியங்களில் அரவாணிகள், ப.68)

மேலும், திருநர் குறித்த சொல்லாடல்களைப் பல்வேறு தமிழ் அகராதிகள் எடுத்துக்கூறுவதனை முனைவர் ந. அறிவுராஜ்,

**“பேடியை ஆங்கிலத்தில் ‘Hermaphrodite’ என்றும்; அலியை ‘Eunuch’ என்றும் கூறுவார்கள். “ஆண் என்றோ பெண் என்றோ கூறமுடியாத நபரை ( A person who is neither male : nor female ) அலி என்றும், பெண்தன்மை அதிகமுள்ளதைப் பேடி” என்றும் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. “ஆண் பெண்ணல்லாதது அலி என்றும் ; பேடி என்பதற்கு பேடு, பேடன், அலி” என்றும் கதிர்வேல்பிள்ளைத் தமிழ்ச்சொல்லகராதி குறிப்பிடுகிறது. “பெண் தன்மை மிகுந்ததைப் பேடி” என்கிறது மதுரைத் தமிழ்ப்பேரகராதி. “ஆண் பெண்ணல்லாதது (Hermaphrodite being which is neither man ; nor woman wholly) அலி என்றும்; பெண்தன்மை மிகுந்ததை (Hermaphrodite with female characteristics predominating) பேடி” என்று தமிழ் லெக்ஸிகன் கூறுகிறது.”**

**(முனைவர் ந.அறிவுராஜ், மூன்றாம் பாலினம் – ஒரு சமூக இனவரைவியல் ப.3)** என்றவாறு தமிழ் அகராதிகள் திருநரைச் சுட்டும் பேடி எனும் சொல்லுக்குப் பல்வேறு விளக்கமளிக்கின்றது. இத்தகைய திருநரின் மாறுபட்ட பாலியல் தன்மைக்கு, அறிவியல் மரபணு மாற்றங்களே காரணம் என்று முன்மொழிகின்றன.

பாலின மாற்றம் - அறிவியல் விளக்கம்

மனிதனின் இயல்பான இரட்டை மரபணுக்களின் (குரோமோசோம்கள்) எண்ணிக்கை நாற்பத்தி ஆறு. அதாவது இருபத்தி மூன்று இணைகள். இவற்றில் 23 இணை குரோமோசோம்களில் 22 இணைகள் ஆட்டோசோம்கள் மற்றும் ஓரிணைபால் குரோமோசோம்கள். ஆணிலும் பெண்ணிலும் ஆட்டோசோம்கள் ஒரே மாதிரியாக உள்ளன. ஆனால், பால் குரோசோம்கள் வேறுபடுகின்றன. இதனை,

> “**பெண்ணில் இருபால் குரோமோசோம்களும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. இவை xx என்று அழைக்கப்படுகின்றன. ஆண்களில் அவை வேறுபட்டு இவை xy என்றும் அழைக்கப்படுகிறது. Y குரோமோசோம் X குரோமோசோமை விடச் சிறியதாக இருக்கிறது. இது ஆண்பாலை நிர்ணயிக்கிறது.**”
>
> **(பெர்னிஸ் ஆனந்தராஜ், மரபியல், ப.368)**

என்ற கூற்றுகள் மெய்ப்பிக்கின்றன. இவ்வாறு கருவில் முதல் சில வாரங்களில் உருவாகி இருக்கும் பாகங்களில் முக்கியமானது முல்லர்நாளம், உல்ஃப்நாளம். இந்த இரண்டு நாளங்களின் பெயர்களும் ஜெர்மன் மருத்துவ விஞ்ஞானிகளின் பெயர்கள் ஆகும். உல்ஃப் நாளம் தான் பின்னர் ஆணின் விந்துப்பைச் சார்ந்த உறுப்புகளாக மாறுகிறது. 'முல்லர் நாளம்' தான் பெண்ணின் வருங்கால கருப்பை, யோனிக்குழாய் தொடர்பானது. கருவில் இருக்கும் சிசுவின் உடலில் முதலில் இரு நாளங்களுமே தோன்றுகின்றன. குரோமோசோக்கு ஏற்ப சுரப்பிகள் வேறுபடுகின்றன. மனித உடலில் இரு சிறுநீரகங்களின் மீதும் முக்கோண வடிவில் அட்ரினல் சுரப்பிகள் உள்ளன. இவற்றிலிருந்து வரும் சுரப்புகளில் ஆண்தன்மை தொடர்பான சுரப்புகள் அளவுக்கு மீறிச் சுரந்தால், குழந்தையின் பால் அடையாளம் பிரச்சனைக்கு உரியதாகிவிடுகிறது. இதையே ‘பால் பிறழ்ச்சி’ என்று அழைக்கப்படுகிறது. மேலும், மாறுபட்ட பாலுறுப்புகளைக் கொண்டவர்களைக் குறிக்க ஆங்கிலத்தில் 'ஹெர்மோப்ராடைட்' எனவும் அழைக்கின்றனர். இவையே திருநர் சமூக மக்களின் பாலியல் மாறுபாடுகளுக்குரிய மருத்துவ அறிவியல் விளக்கங்கள் ஆகும்.

**முடிவுரை**

மனித சமூகத்தில் ஆண், பெண் என்ற இரு பாலினங்கள் மட்டும் இல்லை. இவை இரண்டுக்கும் இடையினமாக திருநர் என்னும் ஓரினம் உண்டு. இயற்கையின் இயக்கக்கூறுகளால் பாதிக்கப்பட்ட இவர்களைத் திருக்குறள் மட்டுமின்றி பழங்காலத் தமிழ் இலக்கியங்கள் 'பேடி' என்னும் சொல்லால் இழிவுபடுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. அத்தகைய பேடி என்னும் சொல்லுக்கு அகராதிகள் மற்றும் கலைக்களஞ்சியங்கள் வழியாக விளக்கங்களைக் காணமுடிகின்றது. இதன்மூலம் திருக்குறள் சுட்டிக்காட்டும் பேடித்தன்மைக்குரிய காரணத்தை மருத்துவ அறிவியல், ஆண் ஆணாகவும், பெண் பெண்ணாகவும் பரிணமிக்க வேண்டுமெனில் நாளமில்லாச் சுரப்பிகளும், பாலினக் கீற்றுகளும் தத்தமது பணியினைச் சீராக செய்ய வேண்டும் என்றும் அதைவிடுத்து அவற்றில் தடுமாற்றங்களும் தடைகளும் ஏற்பட்டால் ஆண் மற்றும் பெண்ணின் பாலியல் ரீதியான மாற்றங்களுடன் அவரவர் தன்மைகளும் மாறுபடுவதை அறிவியல் விஞ்ஞானம் எடுத்துக்காட்டுகின்றது.

துணைநூற்பட்டியல்
1. முனைவர்.கி.அய்யப்பன் 2011 - அரவாணிகள் அன்றும் இன்றும்
விசாலட்சுமிபதிப்பகம், 2012 - அரவாணியம்
கிழக்குத்தெரு, கடையம், 2017 - தமிழ்ச் செவ்வியல் நூல்களில் திருநர்
நல்லாப்பாளையம் அஞ்சல்,
விழுப்புரம்மாவட்டம் – 605 701
2. முனைவர் மு.அருணாசலம் 2011 - தமிழ் இலக்கியங்களில் அரவாணிகள்
அருண் பப்ளிகேஷன்ஸ்4/7-75 கொம்பேறிபட்டி (அஞ்சல்)
அய்யலூர் (வழி)திண்டுக்கல் – 624 801
3. வெ.முனிஷ் 2008 - தமிழ் இலக்கியத்தில் அரவாணிகள்
ஜெயம் பதிப்பகம் 2010 -அரவாணிகளின் பன்முக அடையாளங்கள்வடக்குத் தெரு, கொல்லவீரம்பட்டி,
வில்லூர் (அஞ்சல்)பேரையூர் வட்டம்,
மதுரை மாவட்டம் – 625 707
4. முனைவர் ந.அறிவுராஜ் 2008 மூன்றாம் பாலினம் : ஒரு சமூக இனவரைவியல்
பாவை பப்ளிகேஷன் 142, ஜானி ஜான் கான் சாலை, சென்னை – 600 014.

**நான் கண்ட முடிவு**

திருக்குறள் சுட்டிக் காட்டும் பேடி என்னும் சொல் திருநங்கையரைச் சுட்டிக்காட்டுவதாக இருந்தாலும் அன்றைய தமிழ் சமூகத்தில் திருநர் எனப்படுபவர்கள் எவ்வாறெல்லாம் பார்க்கப்பட்டுள்ளனர் என்பதைக் காண்பதற்குச் சான்றாக அமைகிறது. பொதுவாகப் பேடியர் இருவகைப்படுவர். ஒன்று இயற்கைப் பேடியர் என்றும் செயற்கைப் பேடியர் என்றும் அறியமுடிகின்றது.இதில் இயற்கைப் பேடியர் பிறப்பாலேயே பேடியர் ஆக இருப்பதால் அவர்களுக்குள் பெண் தன்மை மிகவும் பொதிந்து கிடக்கும். அவர்களுக்குத்தான் இன்றைய அறிவியல் விளக்கங்கள் பொருந்தும். அவ்வகையில் பேடி. பெண் தன்மையை விரும்பும் திருநங்கையர் என்ற இலக்கண மரபு பாலினம் பற்றியதே அன்றிப் போர் மறம் பற்றியதல்ல. அத்தகைய பேடியருள் போர் மறம் உடையவர்கள் செயற்கைப் பேடியர். மகாபாரதத்தில் அருச்சுனன் பிருகந்நளை எனும் பேடியாகி விராடநகர் இளவரசி உத்தரைக்குப் பணிப்பெண்ணாக இருந்து நிரைமீட்கப் போரிட்டு வெல்ல முடியும். இவ்வாறு திருக்குறள் பேடி என்ற சொல்லால் குறிப்பிடுவது செயற்கைப் பேடியர் என்பது என் கருத்து. இருப்பினும் திருக்குறள் திருநங்கையரை வீரமற்ற, கோழை என்ற கண்ணோட்டத்திலேயே பதிவு செய்துள்ளதைக் காணமுடிகின்றது.